**R 1611** *A New Leaf*

# புதிய தாள் வேண்டும்
# (புத்தாடை வேண்டும்)

*பாடம் நடத்தி முடித்தபின்னே*
*சிறுவன் ஒருவன் வந்தான் முன்னே.*

*சார், சார் எனக்கோர் வெள்ளைத்தாள் ஒன்று,*
*புதிதாய் வாங்கிக் கொடுப்பீரே,*

*கொடுத்தத் தாளோ பாழாகி, கறைதிரை படிந்தே கிழிந்ததுவே.*

*அப்பழுக்கில்லா புதுத்தாளை அளித்தேன்*
*அவனுக்கிலவசமாய்,*

*துக்கமிகுந்தே இருந்தாலும்*
*துள்ளிக்குதித்தே பெற்றுக்கொண்டான்*

*நேர்த்தியாய் இனிமேல் வாழ்ந்திடு,*
*கிழிந்தால் மீண்டும் கிடைக்காது,*

*நடுக்கத்துடனே நான்கூட,*
*அரியணை அருகினில் நடந்துசென்றே,*

*அன்புத்தந்தாய், அன்புத்தந்தாய், பழையஆண்டு கடந்ததுவே,*

*புதியஆண்டும் பிறந்ததுவே, எனக்கும்கூட*
*ஓர்புத்தாடை மீண்டும் தந்தால் ஆகாதோ?*

*கடந்த ஆண்டைக் கறைபடுத்தி, கழித்தேவிட்டேன்*
*வீணாளாய், அவரோ அந்தக் கறைபடிந்த*
*ஆடையை மீண்டும் பெற்றுக்கொண்டே,*
*அளித்தார் எனக்கோர் புத்தாடை,*

*அப்பழுக்கில்லா ஆடையது,*
*என் மனதில் மீண்டும் புன்னகைத்தேன்,*

*“நேர்த்தியாய் மீண்டும் வாழ்ந்துவிடு,*
*கிழித்தால் மீண்டும் கிடைக்காது”,*

*அன்புடன் உரைத்தார் ஆண்டவரே.*

\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-\-